ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1697/27 - 2011 මාර්තු 18 වැනි සිකුරාදා - 2011.03.18

*1697/27 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ.- 6/2001*

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டம்**

*2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
இலங்கைக் காப்புறுதிச் சபை.

கொழும்பு,
2011, மாச்சு 17.

**விதிகள்**

1. 2004, மே 17 ஆந் திகதியிடப்பட்ட 1341/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2004 ஆம் ஆண்டின் கடனிறுப்பு விளிம்பு (பொதுக் காப்புறுதி) விதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) அதன் 4 ஆம் விதிக்குப் பதிலாகப் பின்வரும் விதியினை இடுவதன் மூலமும் :-

"4 (1) கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, கீழே குறித்துரைக்கப்பட்டவாறு (மொத்த ஏல்தகவுடைய சொத்துக்களின்) அத்தகைய தொகைகளில் அல்லது நூற்று வீதங்களில் பொதுக் காப்புறுதித் தொழிலின் பின்வரும் வகையினவான சொத்துக்கள் (இவ்விதிகளில் "ஏல்தகவுடைய சொத்துக்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏல்தகவுடையனவாகக் கருதப்படுதல் வேண்டும் :-

(அ) (i) இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அல்லது முழுமையாக உத்தரவாதமளிக்கப்பட்ட கடன் பிணையங்கள் (அரசாங்கப் பிணையங்கள்); - 100%

(ii) ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் வெளிநாட்டின் மத்திய வங்கியொன்றினால் வழங்கப்பட்டனவும் அல்லது முழுமையாக உத்தரவாதமளிக்கப்பட்டனவும் அத்துடன் சாதனத்திற்கான முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டிருப்பனவுமான கடன் பிணையங்கள். - 20%

(ஆ) பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தப்பட்ட கம்பெனி ஒன்றின் சாதாரண பங்குகள் ; - 30 %

(இ) (i) உரிமம்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கி ஒன்றினால் வழங்கப்பட்டனவும், அத்துடன் சாதனத்திற்கான முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டுள்ளனவும், அல்லது முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதமொன்றினால் ஆதரிக்கப்பட்டனவும், அல்லது ஏதேனும் பலதரப்பட்ட முகவராண்மையினால் வழங்கப்பட்ட உத்தரவாதம் ஒன்றினால் ஆதரிக்கப் பட்டனவுமான முறிகள்,தொகுதிக்கடன் பத்திரங்கள் வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் வேறு எவையேனும் இவற்றையொத்த நிதிசார் சாதனங்கள் என்பவற்றை உள்ளடக்கிய கூட்டிணைப்புக் கடன் கள் ; - 60 %

(ii) பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தப் பட்டிருக்கின்ற முறிகள், தொகுதிக்கடன் பத்திரங்கள், வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் எவையேனும் இவற்றையொத்த வேறு நிதிசார் சாதனங்கள் என்பன உட்பட, கூட்டிணைப்புக் கடன்கள் ; - 10 %

(iii) கம்பெனி ஒன்றினால் வழங்கப்பட்டனவும், சாதனங்களுக்கான முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டிருப்பனவுமான முறிகள், தொகுதிக்கடன் பத்திரங்கள், வர்த்தகப் பத்திரங்கள், மற்றும் எவையேனும் இவற்றையொத்த வேறு நிதிசார் சாதனங்கள் என்பன உட்பட, கூட்டி ணைப்புக் கடன்கள் ; - 10 %

(iv) சொத்துக்களால் ஆதரிக்கப்பட்ட பிணையங்கள் விடயத்திற் கேற்றவாறு, முதலும் வட்டியும் அல்லது முதிர்ச்சிப்பெறுமானம், முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கி ஒன்றினால் உத்தரவாத மளிக்கப்பட்டுள்ளவிடத்து ; - 10 %

(v) குத்தகைப்பற்று நிலம் மற்றும் கட்டிடம் ;

ஆயின், மேலேயுள்ள உட்பந்திகள் (i), (ii), (iii), (iv), (v) மற்றும் (vi) இல் குறிப்பீடு செய்யப்படும் முதலீடுகள் தொடர்பில் ஏல்தகவுடையதாக்கப்படும். நூற்றுவீதங்களின் மொத்தம், மொத்தக் கூட்டுமொத்த ஏல்தகவுடைய சொத்துக்களின் அறுபது வீதத்தை விஞ்சுதலாகாது. - 15 %

ஆயின், மேலே V ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் முதலீடுகள், இவ்விதிகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதி ஒன்றுக்கு மட்டுமே ஏல்தகவுடையனவாக இருத்தல் வேண்டும். மற்றும் யாரேனும் காப்புறுதியாளர் குத்தகை பற்று நிலத்திலோ அல்லது கட்டிடத்திலோ 2010.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு முதலிட்டிருந்தால் மட்டுமே ; மேலும் வழங்குநர் ஒரு வங்கியாக இருந்தால் அவ்வங்கியால் கடன் வழங்கவோ அல்லது உறுதிப்படுத்தவோ முடியாது இருப்பின்

(ஈ) (i) முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டிருக்கும் ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியுடனான அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற விசேடித்த வங்கியுடனான வைப்புக்கள்; - 40 %

(ii) முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டிருக்கும் ஏதேனும் உரிமம்பெற்ற நிதிக்கம்பெனியுடனான வைப்புக்கள் ; - 10 %

ஆயின் எவ்வாறாயினும்,

(அ) இந்த உட்பந்தியின் கீழ் கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக ஏல்தகவுடைய சொத்துக்களின் நூற்றுவீதங்களின் மொத்தம் அத்தகைய ஏல்தகவுடைய சொத்துக்களின் நாற்பது வீதத்தை விஞ்சுதலாகாது ;

(ஆ) வைப்புக்களானவை வட்டியைக் கொண்டுள்ள வைப்புக்களாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டிருக்கும் உரிமம்பெற்ற ஏதேனும் நிதிக்கம்பெனியுடனான வைப்புக்கள், அத்தகைய உரிமம்பெற்ற நிதிக்கம்பெனி பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றில் குறிப்பிட்ட திகதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இலங்கை மத்திய வங்கியால் நிரற்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு நிரற்படுத்தப் பட்டிருந்தால் மட்டுமே ஏல்தகவுடையனவாதல் வேண்டும் ;

| | | |
|---|---|---|
| (உ) | காப்புறுதியாளரால் இருப்பாட்சி செய்யப்படும் இறையிலிக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ; | - 10 % |
| (ஊ) | முதலீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் இறையிலிக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ; | - 10 % |
| (எ) | கூறுநம்பிக்கைப்பொறுப்புகள்/பரஸ்பர நிதியங்கள் ; | - 25 % |
| (ஏ) | உரிமம்பெற்ற வர்த்தக வங்கியில் அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற விசேடித்த வங்கியில் பாதுகாப்புக் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் தங்கம் ; | சபையின் அங்கீகாரத்துடன் 20 % அல்லது அதனை விடக்கூடிய நூற்று வீதம் ஒன்று, அத்தகைய அங்கீகாரம் காப்புறுதியாளர் மீது விதிக்கப்பட்ட எவையேனும் முதலீட்டு மட்டுப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். |
| (ஐ) | தொடர்புபட்ட எல்லாக் கம்பெனிகளிலும் செய்யப்பட்ட முதலீடுகள் (முதலீடுகளானவை மேலே குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு இணங்கச் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றது). | முதலீட்டுத்தர மதிப்பீட்டை கொண்டுள்ள ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற விசேடித்த வங்கி தவிர, ஆகக்கூடிய தனித்த வெளிப்படுத்துதல் 5% மாக இருக்கின்றதற்கு அமைவாக, 7.5%. |

| | | |
|---|---|---|
| (ஒ) | ஒரு கையளிக்கும் கம்பெனியிடமிருந்து ஒரு மீள் காப்புறுதியாளருக்கு வருமதியான கொடுப்பனவுகளுக்கு எதிரீடாக, அத்தகைய மீள் காப்புறுதியாளரிடமிருந்து அத்தகைய கையளிக்கும் கம்பெனியினால் ஆறு மாதங்களுக்கு மேற்படாது பெறப்படற்பாலனவான தேறிய தொகைகள் ; | உண்மையான தொகை |
| (ஓ) | காப்புறுதிப்பத்திரம் வைத்திருப்பவர்களிடமிருந்து காப்புறுதிப் பத்திரத்தின் தொடக்கத்திலிருந்து அறுபது நாட்களுக்கு மேற்படாது நிலுவையாகவுள்ள கட்டுப்பணம் ; | உண்மையான தொகை |
| (ஔ) | அசைவற்ற ஆதனத்தின் மீது நிலுவையாகவுள்ள ஈட்டுக் கடன்களை வழங்குவதற்காக சபையின் எழுத்திலான முன்னங்கீகாரம் 31.12.2010 இல் உள்ளவாறு அளிக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய கடன்கள். | - 20 % |

(2) இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு மாச்சு 1 ஆந் திகதியன்றும் அதன் பின்னரும், (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் சொத்துக்கள் இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்டவிடத்து, அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய சொத்துக்கள், அத்தகைய தொகையிலும் அல்லது நூற்றுவீதங்களிலும், அச்சொத்துக்களை இலங்கைக்கு வெளியே வைத்திருப்பதற்கு அனுமதித்து, சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளவிடத்து மட்டுமே கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிப்பதற்காக ஏல்தகவுடைய சொத்துக்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள், அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய தொகைகளில் அல்லது நூற்றுவீதங்களில், அத்தகைய சொத்துக்கள் ஏதேனும் பாரபந்தத்திலிருந்து விடுபட்டனவாக இருந்தால் மட்டுமே கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிப்பதற்காக ஏல்தகவுடைய சொத்துக்களாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய பாரபந்தத்துக்குட்பட்ட சொத்துக்களிலிருந்து எழுகின்ற நேரொத்த பொறுப்புக்கள், கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிப்பதற்காகக் கவனத்திற் கொள்ளப்படுதலாகாது.

(2) அதன் 5 ஆம் விதிக்குப் பதிலாகப் பின்வரும் விதியினை இடுவதன் மூலமும் :-

“5. (1) விதி 4 இல் குறித்துரைக்கப்பட்ட ஏல்தகவுடைய சொத்துக்களின் பெறுமதியானது கடனிறுப்பு விளிம்பின் நோக்கத்திற்காக பின்வரும் முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(அ) (i) இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வாராந்தப் பொருளாதாரச் சுட்டிகளில் சுட்டிக்காட்டப்பட்ட அரசாங்கப் பிணையங்களின் சராசரி விற்பனை விலையின் மிகக்கிட்டிய திகதியாகவிருத்தல் வேண்டும் ;

(அ) (ii) உத்தரவாதமளிப்பவரினாலும் வழங்குகின்ற வெளிநாட்டு அரசாங்கத்தினாலும் அல்லது அந்தந்த அரசாங்கத்தின் மத்திய வங்கியினாலும் சான்றுப்படுத்தி வழங்கப்பட்ட மிகக்கிட்டிய வெளியிடப்பட்ட வாங்கும் விலையாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஆகுசெலவில் அல்லது சந்தைப் பெறுமதியில், இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதில் பெறுமதிமதிப்பிடப்படுதல் வேண்டும் ;

(இ) (i), (ii) விலைகூறப்பட்ட கூட்டிணைப்புக் கடன்;

(iii) மற்றும் (iv) கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் தீர்மானிக்கப்பட்ட கடைசியாக வியாபாரஞ் செய்யப்பட்ட பங்குத்தொகுதியின்படி நிலவுகின்ற சந்தை விலையாதல் வேண்டும்.

விலைகூறப்படாத கூட்டிணைப்புக் கடன்.

ஒன்றில் நேர்கோட்டுமுறையை அல்லது தொடர்ச்சியான ஈட்டுகை முறையைப் பயன்படுத்தி (ஆகுசெலவு + திரண்ட வருமானம்) முறையான அடிப்படையில் முதிர்வுத் திகதிவரை குறித்தொதுக்கப்பட்ட கட்டுப்பணங்களைக் கடன் தீர்ப்பதற்காக அல்லது கழிப்பனவுகளைத் திரட்டுவதற்காகச் சீராக்கப்பட்டவாறு, ஆகுசெலவில் எடுக்கப்படுதல் வேண்டும்.

| | |
|---|---|
| (இ) V குத்தகைப் பற்று நிலத்தின் பெறுமதி. | ஆகுசெலவுப் பெறுமதியில் அல்லது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட மீளப்பெறுமதி மதிப்பிடப்பட்ட தொகையில் இருத்தல் வேண்டும். |
| (இ) VI குத்தகைப் பற்றுக் கட்டிடத்தின் பெறுமதி | ஒன்றுதிரண்ட பெறுமானத் தேய்வைக் கழித்து ஆகுசெலவுப் பெறுமதியில் அல்லது மீளப்பெறுமதி மதிப்பிடப்பட்ட பின்னர் பெறுமானத்தேய்வின் ஒன்றுதிரண்ட தொகையைக் கழித்து, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய மீளப்பெறுமதி மதிப்பிடப்பட்ட தொகையிலிருத்தல் வேண்டும். |
| (ஈ) (i) மற்றும் (ii) | வைப்பின் பிரதான பெறுமதியாகவும் திரண்ட வட்டியாகவுமிருத்தல் வேண்டும். |
| இறையிலிக் காணியின் பெறுமதி. | ஆகுசெலவுப் பெறுமதியில் அல்லது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட மீளப்பெறுமதி மதிப்பிடப்பட்ட தொகையிலிருத்தல் வேண்டும். |
| இறையிலிக் கட்டிடத்தின் பெறுமதி. | ஒன்றுதிரண்ட பெறுமானத் தேய்வைக் கழித்து ஆகுசெலவுப் பெறுமதியில் அல்லது மீளப்பெறுமதி மதிப்பிடப்பட்ட பின்னர் பெறுமானத்தேய்வின் ஒன்றுதிரண்ட தொகையைக் கழித்து சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய மீளப்பெறுமதி மதிப்பிடப்பட்ட தொகையிலிருத்தல் வேண்டும். |
| (எ) | ஆகுசெலவில் அல்லது முகாமையாளர்களின் வாங்கு விலையில், இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதில் பெறுமதி மதிப்பிடப்படுதல் வேண்டும். |
| (ஏ) | ஆகுசெலவில் அல்லது சந்தைப்பெறுமதியில், இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதில் பெறுமதி மதிப்பிடப்படுதல் வேண்டும். |

(2) ஆறு மாதங்களுக்கு மேலாக நிலுவையாக இருக்கும் முதலீட்டு வருமானம் ஒன்றைக் காப்புறுதியாளர் ஒருவர் ஐயக்கடன் ஏற்பாடாகக் கருதுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வருமானம் எந்தச் சொத்திலிருந்து பெறப்பட்டதோ அந்தச் சொத்து கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிப்பதில் தவிர்க்கப்படுதலும் வேண்டும்.”.

(3) அதன் 5 ஆம் விதியை உடனடுத்துப் பின்வரும் புதிய விதியினை உட்புகுத்துவதன் மூலமும் :-

“ 5அ. விதி 4 (i) (அ) (ii), இ (i), (iii), (iv), (ஈ) (i) மற்றும் (ii) என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்ட சொத்து :-

(அ) இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உருவகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அத்தகைய சொத்து, விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய சொத்து அல்லது உருவகம், கடன் மதிப்பீட்டு முகவராண்மை ஒன்றினால் மதிப்பிடப்பட்டிருப்பின் அத்துடன் அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்ச சர்வதேசத் தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருப்பின் அல்லது வேறு முதலீட்டு தர மதிப்பீட்டு வரைவிலக்கணம் உரிய கடன் மதிப்பீட்டு முகவரான்மையால் நேரத்திற்கு நேரம் குறைந்தளவு சர்வதேச தேவைப்பாடாக வைக்கப்பட்டிருந்தால் மட்டுமே ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

இலங்கைக்குள் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உருவகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அத்தகைய சொத்து, விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய சொத்து அல்லது உருவகம் கடன் மதிப்பீட்டு முகவராண்மை ஒன்றினால் மதிப்பிடப்பட்டிருப்பின் அத்துடன் அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருப்பின் அல்லது வேறு முதலீட்டு தர மதிப்பீட்டு வரைவிலக்கணம் உரிய கடன் மதிப்பீட்டு முகவரான்மையால் நேரத்திற்கு நேரம் குறைந்தளவு சர்வதேச தேவைப்பாடாக வைக்கப்பட்டிருந்தால் மட்டுமே ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

*(4) அதன் 6 ஆம் விதியினை நீக்குவதன் மூலமும் ; அத்துடன்*

*(5) எட்டாம் விதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் .*

*" 8. இவ்விதிகளில் சந்தரப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி*

*"சட்டம்" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டம் எனப் பொருள்படும்;*

*"சொத்துக்களால் ஆதரிக்கப்பட்ட பிணையங்கள்" என்பது, பெறப்படற்பாலனவற்றின் தனிவேறான தொகுதியொன்றின் அல்லது வேறு நிதிசார்ந்த சொத்துக்களின் பணப்பாய்ச்சலால், ஒன்றில் நிலையாக அல்லது சுழற்சி முறையில் ஆரம்பமாகச் சேவிக்கப்படுவதும், அவற்றின் நியதிகளின்படி திட்டவட்டமான காலப்பகுதியொன்றிற்குள் பணமாக மாறுகின்றதுமான பிணையம் ஒன்று எனவும், அத்துடன் சேவிக்கப்படுவதை அல்லது வருவாய்கள் உரிய நேரத்தில் பிணையத்தை வைத்திருப்பவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கென வடிவமைக்கப்பட்ட எவையேனும் உரிமைகள் அல்லது வேறு சொத்துக்கள் எனவும் பொருள்படும் ;*

*"சபை" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிச் சபை எனப் பொருள்படும் ;*

*"கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்று எனப்பொருள்படும் ;*

*"முதலீட்டுத்தர மதிப்பீடு" என்பது, விடயத்திற்கேற்றவாறு, இவ்விதிகளுக்கான அட்டவணையின் பாகம் I மற்றும் பாகம் II இல் தரப்பட்ட ஏதேனும் கடன் மதிப்பீட்டு முகராண்மையினால் குறித்தளிக்கப்பட்ட கடன் மதிப்பீடு ஒன்று அத்துடன் முற்போந்த பதினெட்டு மாதங்களினுள் குறித்தளிக்கப்பட்டுள்ள அல்லது பரிசீலனை செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ஒன்று எனப் பொருள்படும் ;*

*"உரிமம்பெற்ற வர்த்தக வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ் வர்த்தக வங்கி ஒன்றாக உரிமம் ஒன்று வழங்கப்பெற்ற ஒரு கம்பெனி அல்லது ஏதேனும் நிறுவனம் எனப் பொருள்படும் ;*

*"உரிமம்பெற்ற நிதிக் கம்பெனி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நிதிக் கம்பெனி ஒன்றாகப் பதிவு செய்யப்பட்ட கம்பெனி ஒன்று எனப் பொருள்படும் ;*

*"உரிமம்பெற்ற விசேடித்த வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கீழ் விசேடித்த வங்கியொன்றாக உரிமம் ஒன்று வழங்கப்பெற்ற ஒரு கம்பெனி அல்லது ஏதேனும் நிறுவனம் எனப் பொருள்படும் ;*

*"பலதரப்பட்ட முகவராண்மை" என்பது, சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம் மற்றும் இவ்விதிகளின் நோக்கத்திற்காகக் காலத்திற்குக் காலம் பலதரப்பட்ட முகவராண்மை ஒன்றாகச் சபையால் கருதப்பட்டு அங்கீகரிக்கப்படக்கூடியதான அதேபோன்ற வேறு ஏதேனும் நிறுவனம் எனப் பொருள்படும் ;*

*"தொடர்புபட்ட கம்பெனி" என்பது, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களில் "தொடர்புபட்ட திறத்தவர்" என்பதற்குக் கொடுக்கப்பட்டவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;*

*"பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை" என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவத்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையாக உரிமம் ஒன்று வழங்கப்பெற்ற கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்று எனப் பொருள்படும் ; அத்துடன்*

*"கூறு நம்பிக்கைப்பொறுப்பு" என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவத்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் கூறு நம்பிக்கைப்பொறுப்பு ஒன்று எனப் பொருள்படுவதுடன், எந்தக் கூறு நம்பிக்கைப்பொறுப்புக்காக முகாமைக் கம்பெனிக்கு அச்சட்டத்தின் கீழ் உரிமம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்தக் கூறு நம்பிக்கைப்பொறுப்பு எனவும் பொருள்படும் ; அத்துடன் இது, இலங்கைக்கு வெளியேயுள்ள எந்தக் கூறுநம்பிக்கைப் பொறுப்பில் அல்லது எந்தப் பரஸ்பர நிதியத்தில் முதலீடொன்று சபையால் அனுமதிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் கூறுநம்பிக்கைப் பொறுப்பையும் அல்லது அந்த ஏதேனும் பரஸ்பர நிதியத்தையும் உள்ளடக்கும்.".*

(6) எட்டாம் விதியினை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-

[விதி 5அ]

அட்டவணை

பாகம் I

| கடன் மதிப்பீட்டு முகவராண்மை | உருவகத்தின் அல்லது பிணையத்தின் குறைந்த பட்ச சர்வதேச மதிப்பீடு | பிணையத்தின் குறைந்தபட்ச சர்வதேச குறுங்கால மதிப்பீடு (ஒரு வருடத்திற்குக் குறைவானது) |
|---|---|---|
| (1) மூடீஸ் இன்வெஸ்டர் சேர்விசஸ் | Baa3 | P3 |
| (2) ஸ்டான்டேர்ட் அன்ட் புவேர்ஸ் கோர்பரேஷன் | BBB | A3 |
| (3) பிச் ரேட்டிங்ஸ் | BBB- | F 3 |
| (4) ஏ. எம். பெஸ்ற் கம்பெனி இன்கோர்பரேட்டட் | bbb- | AMB - 3 |

பாகம் II

| கடன் மதிப்பீட்டு முகவராண்மை | உருவகத்தின் அல்லது பிணையத்தின் குறைந்த பட்ச மதிப்பீடு | பிணையத்தின் குறைந்தபட்ச சர்வதேச குறுங்கால மதிப்பீடு (ஒரு வருடத்திற்குக் குறைவானது) |
|---|---|---|
| (1) பிச் ரேட்டிங்ஸ் (லங்கா) லிமிட்டெட் | BBB- (lka) | F3 (lka) |
| (2) ராம் ரேட்டிங்ஸ் (லங்கா) லிமிட்டெட் | BBB - | P- 3 |

(7) இவ்விதிகள் 2011, ஏப்பிறல் 1 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

4- 180/1

---

ச. வ. பீ.- 6/2001

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டம்**

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
இலங்கைக் காப்புறுதிச் சபை.

கொழும்பு,
2011, மாச்சு 17.

**விதிகள்**

*2002, செத்தெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட 1255/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் கடனிறுப்பு விளிம்பு (நீண்டகாலக் காப்புறுதி) விதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-*

(1) அதன் இரண்டாம் விதியின் (2) ஆம் உபவிதியை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய விதியினை உட்புத்துவதன் மூலமும் :-

" (3) நீண்டகாலக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துபவரும் முதலீடு இணைக்கப்பட்ட நீண்டகாலக் காப்புறுதித் திட்டத்தை வழங்குகின்ற வருமான காப்புறுதியாளர் ஒவ்வொருவரும் பின்வருவன தொடர்பில் இவ்விதிகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(i) அலகு சாராக் கணக்கில் எழுகின்ற பொறுப்புக்கள் ; அத்துடன்

(ii) சேமிப்பு நன்மைகள் காப்புறுதியாளரால் உத்தரவாதமளிக்கப்படுகின்றவிடத்து அலகுக் கணக்கில் எழுகின்ற பொறுப்புக்கள்.

(2) அதன் 13 ஆம் விதிக்குப் பதிலாகப் பின்வரும் விதியினை இடுவதன் மூலமும் :-

"13 (1) கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, நீண்டகாலக் காப்புறுதித் தொழிலின் சொத்துக்களின் பின்வரும் வகைகளும் கீழே குறித்துரைக்கப்படக்கூடியவாறான (மொத்த ஏல்தகவுடைய சொத்துக்களின்) அத்தகைய தொகையிலும் அல்லது நூற்று வீதங்களிலும் ஏல்தகவுடையதாகக் கருதப்படுகின்றது. (இவ்விதிகளில் "ஏல்தகவுடைய சொத்துக்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்):-

(அ) (i) இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அல்லது முழுமையாக உத்தரவாதமளிக்கப்பட்ட கடன் பிணையங்கள் ; - 100 %

(ii) ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் வெளிநாட்டின் மத்திய வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் அல்லது முழுமையாக உத்தரவாதமளிக்கப்பட்டதும் அத்துடன் சாதனத்திற்கான முதலீட்டுத்தர வீதத்தை கொண்டிருப்பதுமான கடன் பிணையங்கள். - 20 %

(ஆ) பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தப்பட்ட கம்பெனி ஒன்றின் சாதாரண பங்குகள் ; - 40 %

(இ) (i) உரிமம்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கி ஒன்றினால் வழங்கப்பட்டதும், அத்துடன் சாதனத்திற்கான முதலீட்டுத்தர வீதத்தைக் கொண்டுள்ளனவும், அல்லது முதலீட்டுத்தர வீதத்தை கொண்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதமொன்றினால் ஆதரிக்கப்பட்ட, அல்லது ஏதேனும் பலதரப்பட்ட முகவராண்மையினால் வழங்கப்பட்ட உத்தரவாதம் ஒன்றினால் ஆதரிக்கப்பட்ட முறிகள்,தொகுதிக்கடன் பத்திரங்கள் வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் வேறு எவையேனும் இவற்றையொத்த நிதிசார் சாதனங்கள் என்பவற்றை உள்ளடக்கிய கூட்டிணைப்புக் கடன்கள் ; - 50 %

(ii) பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றின் மீது நிரற்படுத்தப்பட்டிருக்கின்ற முறிகள், தொகுதிக்கடன் பத்திரங்கள், வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் எவையேனும் இவற்றையொத்த வேறு நிதிசார் சாதனங்கள் என்பன உட்பட, கூட்டிணைப்புக் கடன்கள் ; - 10 %

(iii) சாதனத்திற்கான முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டுள்ள கம்பெனி ஒன்றினால் வழங்கப்பட்ட முறிகள், தொகுதிக்கடன் பத்திரங்கள், வர்த்தகப் பத்திரங்கள், மற்றும் எவையேனும் இவற்றையொத்த வேறு நிதிசார் சாதனங்கள் என்பன உட்பட, கூட்டிணைப்புக் கடன்கள் ; - 10 %

(iv) விடயத்திற்கேற்றவாறு மூலதனத்தையும் வட்டியையும் அல்லது முதிர்ச்சிப்பெறுமானம் என்பன முதலீட்டுத்தர மதிப்பீட்டை கொண்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் அல்லது முதலீட்டுத்தர மதிப்பீட்டை கொண்டுள்ள உரிமம்பெற்ற விசேடித்த வங்கி ஒன்றினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளவிடத்து சொத்துக்களால் ஆதரிக்கப்பட்ட பிணையங்கள் ; - 10 %

(v) குத்தகைப்பற்று நிலம் மற்றும் கட்டிடம் ; - 15 %

ஆயின், எவ்வாறாயினும் மேலேயுள்ள உபபந்திகள் (i), (ii), (iii), (iv), மற்றும் (v) இல் குறிப்பீடு செய்யப்படும் முதலீடுகள் தொடர்பில் ஏல்தகவுடையதாகச் செய்யப்படும் நூற்றுவீதங்களின் மொத்தம் கூட்டுமொத்த ஏல்தகவுடைய சொத்துக்களின் அறுபது வீதத்தை விஞ்சுதலாகாது ;

ஆயினும் மேலும் மேலே (v) ஆம் உபபந்தியில் குறிப்பீடு செய்யப்படும் முதலீடுகள், இவ்விதிகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் காலப்பகுதி ஒன்றுக்கு மட்டும் மற்றும் ஒரு காப்புறுதியாளர் குத்தகைபற்று நிலத்திலோ அல்லது கட்டடத்திலோ 31.12.2010 இல் உள்ளவாறு முதலிட்டிருந்தாலோ மேலும் வழங்குநர் ஒரு வங்கியாக இருந்தால் அவ்வங்கியால் கடன் வழங்கவோ அல்லது உறுதிபடுத்தவோ முடியாதிருப்பின் மட்டும் ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஈ) (i) முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டிருக்கும் ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற விசேடித்த வங்கியுடனான வைப்புக்கள்; - 40 %

(ii) முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டிருக்கும் ஏதேனும் உரிமம்பெற்ற நிதிக்கம்பெனியுடனான வைப்புக்கள் ; - 10 %

ஆயின் எவ்வாறாயினும்,

(அ) உபபந்தியின் கீழ் கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக ஏல்தகவுடைய சொத்துக்களின் நூற்றுவீதங்களின் மொத்தம் அத்தகைய ஏல்தகவுடைய சொத்துக்களின் நாற்பது வீதத்தை விஞ்சுதலாகாது ;

(ஆ) வைப்புக்களானவை வட்டியைக் கொண்டுள்ள வைப்புக்களாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டிருக்கும் உரிமம்பெற்ற ஏதேனும் நிதிக்கம்பெனியுடனான வைப்புக்கள், அத்தகைய உரிமம்பெற்ற நிதிக்கம்பெனி பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றின் மீது குறிப்பிட்ட திகதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இலங்கை மத்திய வங்கியால் நிரற்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு நிரற்படுத்தப் பட்டிருந்தால் மட்டுமே ஏல்தகவுடையதாதல் வேண் டும் ;

(உ) காப்புறுதியாளரால் இருப்பாட்சிப்படுத்தப்படும் இறையிலிக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ; - 15 %

| | | |
|---|---|---|
| (ஊ) | முதலீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் இறையிலிக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ; | - 15 % |
| (எ) | கூறுநம்பிக்கைப்பொறுப்புகள்/பரஸ்பர நிதியங்கள் ; | - 25 % |
| (ஏ) | உரிமம் பெற்ற வர்த்தக வங்கியில் அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற விசேடித்த கம்பெனியில் பாதுகாப்புக் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் தங்கம் ; | சபையின் அங்கீகாரத்துடன் 20 % அல்லது அதனை விடக்கூடிய நூற்று வீதம் ஒன்று, அத்தகைய அங்கீகாரம் காப்புறுதியாளர் செய்பவர் மீது விதிக்கப்பட்ட எவையேனும் முதலீட்டு மட்டுப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். |
| (ஐ) | தொடர்புபட்ட எல்லாக் கம்பெனிகளிலும் செய்யப்பட்ட முதலீடுகள் (முதலீடுகளானவை மேலே குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு இணங்கச் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றது). | முதலீட்டுத்தர மதிப்பீட்டை கொண்டுள்ள ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற விசேடித்த வங்கி தவிர, ஆகக்கூடிய தனித்த வெளிப்படுத்துதல் 5% மாக இருக்கின்றதற்கு அமைவாக, 7.5%. |
| (ஒ) | கையளிக்கும் கம்பெனியிடமிருந்து மீள் காப்புறுதியாளருக்கு வருமதியான கொடுப்பனவுகளுக்கு எதிராக பதிவளிக்கின்றவாறான அத்தகைய மீள் காப்புறுதியாளர்களிடமிருந்து அல்லது கையளிக்கும் கம்பனிகளிடமிருந்து ஆறு மாதங்களுக்கு மேற்படாது பெறப்படற்பாலதான தேறிய தொகைகள் ; | உண்மையான தொகை |
| (ஓ) | கடனானது காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்படைப்புப் பெறுமானத்திற்குள் வழங்கப்பட்டிருக்குமிடத்து நிலுவையாக உள்ள காப்புறுதிப்பத்திரக் கடன்கள் ; | உண்மையான தொகை |

(2) 2001 ஆம் ஆண்டு மாச்சு 1 ஆந் திகதியன்றும் அதன் பின்னரும், (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் சொத்துக்கள் இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்படுமிடத்து, அத்தகைய சொத்துக்களும், அத்தகைய தொகையும் அல்லது அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான நூற்றுவீதங்களும், இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்படும் அத்தகைய சொத்துக்களை அனுமதிக்கும் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளவிடத்து மட்டுமே கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிக்கும் ஏல்தகவுடைய சொத்துக்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(3)* ஏல்தகவுடைய சொத்துக்கள் ஏதேனும் பாரபந்தத்திற்கு உட்படாததாக இருப்பதுடன் அத்தகைய பாரபந்தத்திற்கு உட்பட்ட சொத்துக்களில் இருந்து எழுகின்ற நேரொத்த பொறுப்புக்கள் கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிப்பதற்கான கருத்திற்கு உட்படுத்தப்படுதலாகாதெனவும் இருந்தால் மட்டும் ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய தொகைகளில் அல்லது வீதங்களில் கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிப்பதற்காக ஏல்தகவுடைய சொத்துக்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(3)* அதன் 14 ஆம் விதிக்குப் பதிலாகப் பின்வரும் விதியினை இடுவதன் மூலம் :-

"14. (1) விதி 13 இல் குறித்துரைக்கப்பட்ட ஏல்தகவுடைய சொத்துக்களின் பெறுமதியானது கடனிறுப்பு விளிம்பின் நோக்கத்திற்காக பின்வரும் முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

| 13 (1) ஆம் விதியில் குறித்துரைக்கப்பட்ட சொத்து | விலைமதிப்பு செய்முறைத்துவம் |
|---|---|
| (அ) (i) | இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் வாராந்தப் பொருளாதாரச் குறிகாட்டிகளில் சுட்டிக்காட்டப்பட்ட அரசாங்கப் பிணையங்களின் மிகவும் அண்மித்த தேறிய சராசரி விற்பனை விலையாதல் வேண்டும் ; |
| (அ) (ii) | உத்தரவாதமளிப்பவரினாலும் வழங்குகின்ற வெளிநாட்டு அரசாங்கத்தினாலும் அல்லது அந்தந்த அரசாங்கத்தின் மத்திய வங்கியினாலும் சான்றுப்படுத்தி வழங்கப்பட்ட மிகக்கிட்டிய வெளியிடப்பட்ட கொள்வனவு விலையாகவிருத்தல் வேண்டும் ; |
| (ஆ) | ஆகுசெலவில் அல்லது சந்தைப் பெறுமதியில், இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதில் பெறுமதியிடப்படுதல் வேண்டும் ; |
| (இ) (i), (ii) (iii), மற்றும் (iv), | விலை கோரி பெறப்பட்ட கூட்டிணைப்புக் கடன்;<br><br>கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் தீர்மானிக்கப்பட்ட கடைசியாக வியாபார பங்குத்தொகுதி ஒன்றுக்கான நிலவுகின்ற சந்தை விலையாதல் வேண்டும்.<br><br>விலைகோரிப் பெறப்படாத கூட்டிணைப்புக் கடன்.<br><br>ஒன்றில் நேர்கோட்டுமுறையை அல்லது தொடர்ச்சியான ஈட்டுகை முறையைப் பயன்படுத்தி (ஆகுசெலவு + திரண்ட வருமானம்) முறையான அடிப்படையில் முதிர்வுத் திகதிவரை குறித்தொதுக்கப்பட்ட கட்டுப்பணங்களைக் கடன் தீர்ப்பதற்காக அல்லது கழிப்பனவுகளைத் திரட்டுவதற்காக சீராக்கப்படும் , ஆகுசெலவில் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) V குத்தகைப் பற்று நிலத்தின் பெறுமதி. | சபையால் அங்கீகரிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளர் ஒருவரால் தீர்மானிக்கப்பட்ட ஆகுசெலவுப் பெறுமதியில் அல்லது மீள்மதிப்பீட்டின் தொகையில் இருத்தல் வேண்டும். |
| (இ) VI குத் தகைப் பற்றுக் கட்டிடத்தின் பெறுமதி | ஆகுசெலவுப் பெறுமதியில் திரண்ட பெறுமானத் தேய்வைக் கழித்துவரும் தொகையில் அல்லது சபையால் அங்கீகரிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளர் ஒருவரினால் தீர்மானிக்கப்பட்ட மீள்மதிப்பீட்டுத் தொகையில், அத்தகைய மீள்மதிப்பீட்டின் பின்னர் திரண்ட பெறுமானத் தேய்வுத் தொகையைக் கழித்துவரும் தொகையாக இருத்தல் வேண்டும். |
| (ஈ) (i) மற்றும் (ii) | வைப்பின் முதல் பெறுமதியும் திரண்ட வட்டியுமாதல் வேண்டும். |
| இறையிலிக் காணியின் பெறுமதி. | சபையால் அங்கீகரிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளர் ஒருவரால் தீர்மானிக்கப்பட்ட ஆகுசெலவுப் பெறுமதியில் அல்லது மீள்மதிப்பீட்டுத் தொகையில் இருத்தல் வேண்டும். |

| 13 (1) ஆம் விதியில் குறித்துரைக்கப் பட்ட சொத்து | விலைமதிப்பு செய்முறைத்துவம் |
|---|---|
| (எ) | ஆகுசெலவில் அல்லது முகாமையாளர்களின் கொள்விலையில் இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதில் பெறுமதியிடப்படுதல் வேண்டும். |
| (ஏ) | ஆகுசெலவில் அல்லது சந்தைப்பெறுமதியில், இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதில் பெறுமதியிடப்படுதல் வேண்டும். |
| (ஒ) | நிலுவையாக உள்ள மூலதனம் அல்லது கடனின் தேறிய பெறுமானம் இதில் எது குறைவாகவுள்ளதோ அந்தத் தொகையை விஞ்சுதலாகாது. |

(2) ஆறு மாதங்களுக்கு மேலாக நிலுவையாக இருக்கும் முதலீட்டு வருமானம் ஒன்றைக் காப்புறுதியாளர் ஒருவர் ஐயக்கடன் ஏற்பாடாகக் கருதுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வருமானம் எந்தச் சொத்துக்களிலிருந்து பெறப்பட்டதோ அந்தச் சொத்து கடனிறுப்பு விளிம்பைத் தீர்மானிப்பதில் புறநீக்கப்படுதலும் வேண்டும்.".

(4) அதன் 14 ஆம் விதியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விதியினை உட்புகுத்துவதன் மூலமும் :-

" 14அ விதி 13 (i) (அ) (ii), (இ) (i), (iii), (iv), (ஈ) (i) மற்றும் (ii) என்பனவற்றில் குறித்துரைக்கப்பட்ட சொத்து :-

(அ) இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட நிறுவன ஒன்றினால் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அத்தகைய சொத்து அல்லது நிறுவனம் விடயத்துக்கேற்றவாறு, பாகம் I இல் கடனிடும் வீத முகவராண்மை ஒன்றினால் மதிப்பிடப்பட்டிருப்பின் அத்துடன் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்ச சர்வதேசத் தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருப்பின் அல்லது வேறு முதலீட்டு தர மதிப்பீட்டு வரைவிலக்கணம் உரிய கடன் மதிப்பீட்டு முகவரான்மையால் நேரத்திற்கு நேரம் குறைந்தளவு சர்வதேச தேவைப்பாடாக கொடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இலங்கைக்குள் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவன ஒன்றினால் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அத்தகைய சொத்து அல்லது நிறுவனம் விடயத்துக்கேற்றவாறு கடன் இடும் வீத முகவராண்மை ஒன்றினால் மதிப்பிடப்பட்டிருப்பின் அத்துடன் அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருப்பின் அல்லது வேறு முதலீட்டு தர மதிப்பீட்டு வரைவிலக்கணம் உரிய கடன் மதிப்பீட்டு முகவரான்மையால் நேரத்திற்கு நேரம் குறைந்தளவு சர்வதேச தேவைப்பாடாக கொடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(5) அதன் 17 ஆம் விதியினை நீக்குவதன் மூலமும் ; அத்துடன் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"17. இவ்விதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"சட்டம்" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டம் எனப் பொருள்படும்;

"காப்பீட்டுக் கணிப்பாளர்" என்பது இச்சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டுக் கணிப்பாளர்எனப் பொருள்படும்.

"சொத்துக்களால் ஆதரிக்கப்பட்ட பிணையங்கள்" என்பது, பெறப்படற்பாலனவற்றின் தனிவேறான தொகுதியொன்றின் அல்லது வேறு நிதிசார்ந்த சொத்துக்களின் பணப்பாய்ச்சலால், ஒன்றில் நிலையாக அல்லது சுழற்சி முறையில் ஆரம்பமாகச் சேவிக்கப்படுவதும், அவற்றின் நியதிகளின்படி திட்டவட்டமான காலப்பகுதியொன்றிற்குள் பணமாக மாற்றுகின்றதுமான பிணையம் ஒன்று எனவும், அத்துடன் சேவிக்கப்படுவதை அல்லது வருவாய்கள் உரிய நேரத்தில் பிணையத்தை வைத்திருப்பவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கென வடிவமைக்கப்பட்ட எவையேனும் உரிமைகள் அல்லது வேறு சொத்துக்கள் எனவும் பொருள்படும் ;

“சபை” என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிச் சபை எனப் பொருள்படும் ;

“கம்பெனி” என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்று எனப்பொருள்படும் ;

“முதலீட்டுத்தர மதிப்பீடு” என்பது, விடயத்திற்கேற்ப, இவ்விதிகளுக்கான அட்டவணையின் பாகம் I மற்றும் பாகம் II இல் தரப்பட்ட ஏதேனும் கடனிடும் வீத முகராண்மையினால் குறித்தொதுக்கப்பட்ட கடனிடும் வீதம் ஒன்று எனவும் அத்துடன் முற்போந்த பதினெட்டு மாதங்களினுள் குறித்தளிக்கப்பட்டுள்ள அல்லது மீளாய்வு செய்யப்பட்டுள்ளதான தர வீதம் ஒன்று எனப் பொருள்படும் ;

“உரிமம்பெற்ற வர்த்தக வங்கி” என்பது, கம்பனி ஒன்று அல்லது வர்த்தக வங்கி ஒன்றாக 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்டத்தின் கீழ் உரிமம் ஒன்றைப் பெற்ற ஏதேனும் நிறுவனம் எனப் பொருள்படும் ;

“உரிமம்பெற்ற நிதிக் கம்பெனி” என்பது, விசேடித்த வங்கி ஒன்றாக 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் நிதிக் கம்பனி ஒன்றாகப் பதிவு செய்யப்பட்ட கம்பனி ஒன்று எனப் பொருள்படும் ;

“உரிமம்பெற்ற விசேடித்த வங்கி” என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கீழ் உரிமம் ஒன்று வழங்கப்பெற்ற ஒரு கம்பெனி அல்லது ஏதேனும் நிறுவனம் எனப் பொருள்படும் ;

“பலதரப்பட்ட முகவராண்மை” என்பது, சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம் மற்றும் இவ்விதிகளின் நோக்கத்திற்காகக் காலத்திற்குக் காலம் பலதரப்பட்ட முகவராண்மை ஒன்றாக சபையால் கருதப்பட்டு அங்கீகரிக்கக்கூடியதான அதேபோன்ற வேறு ஏதேனும் நிறுவனம் எனப் பொருள்படும் ;

“சார்புடைய கம்பெனி” என்பது, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமனங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமனங்களில் “சார்புடைய திறத்தவர்” என்பதற்குக் கொடுக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

“பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை” என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவத்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றாக உரிமம் வழங்கப்பட்டுள்ள கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்று எனப் பொருள்படும் ;

“கூறு நம்பிக்கைப்பொறுப்பு” என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவத்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் எந்தக் கூறு நம்பிக்கைப்பொறுப்புக்கு முகாமைக் கம்பெனி அச்சட்டத்தின் கீழ் உரிமம் ஒன்றை வழங்கியுள்ளதோ அந்த கூறு நம்பிக்கைப் பொறுப்பு எனவும் பொருள்படுவதுடன்; இது, ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் பரஸ்பர நிதியம்” எந்த முதலீட்டுச் சபையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதோ அந்த முதலீடு எனவும் பொருள்படும்.

(6) பதினேழாம் விதியினை உடனடுத்துப்பின்னர் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

அட்டவணை

பாகம் I

[விதி 14அ]

| கடனிடும் வீத முகவராண்மை | | நிறுவனத்தின் அல்லது பிணையத்தின் குறைந்த பட்ச சர்வதேச வீதம் | பிணையத்தின் குறைந்தபட்ச சர்வதேச குறுங்கால வீதம் (ஒரு வருடத்திற்குக் குறைவானது) |
|---|---|---|---|
| (1) | மோடிவ் இன்வெஸ்டர் ஸேவிஸ் | Baa3 | P3 |
| (2) | ஸ்டான்டேர்ட் அன்ட் புவேர்ஸ் கோர்பரேஷன் | BBB | A3 |
| (3) | பிச் ரேட்டிங்ஸ் | BBB- | F 3 |
| (4) | ஏ. எம். வெஸ்ற் கம்பெனி இன்கோர்பரேட்டட் | bbb- | AMB - 3 |

பாகம் II

| கடனிடும் வீத முகவராண்மை | நிறுவனத்தின் அல்லது பிணையத்தின் குறைந்த பட்ச வீதம் | பிணையத்தின் குறைந்தபட்ச குறுங்கால வீதம் (ஒரு வருடத்திற்குக் குறைவானது) |
|---|---|---|
| (1) பிச் ரேட்டிங்ஸ் (லங்கா) லிமிட்டெட் | BBB- (Ika) | F3 (Ika) |
| (2) ராம் ரேட்டிங்ஸ் (லங்கா) லிமிட்டெட் | BBB | P- 3 |

(7) இவ்விதிகள் 2011, ஏப்பிறல் 1 ஆந் திகதி தொடங்குகின்ற காலாண்டிலிருந்தே பயனுறுதல் வேண்டும்.

*4- 180/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.